தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 5, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஆகஸ்ட் 21, செவ்வாய்க் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு."

தம் நிலைமையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக் கொள்ளாது. ஆகையால், உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக் குறியிட்ட வினாக்கள்.

மதுராந்தகம் தீயணைப்பு நிலையம்.

***1212 திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் கடந்த சில மாதங்களாக தீயணைப்பு வண்டியில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தீயணைப்பு வண்டி வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் 12—3—1989 முதல் ஒரு தீயணைப்பு நீர்த்தாங்கி வண்டி எண் டி.எம்.ஒய். 7973 நிறுத்தப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 29—12—1988 முதல் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி எண் டி.எம்.ஜே. 7741 மதுராந்தகம் தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டு அதுவும் நல்ல முறையில் பணியாற்றி வருகின்றது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களிலே நாம் தீயணைப்பு நிலையங்களை ஆரம்பித்து இருக்கிறோம். இப்போது நிலக்கோட்டை, வத்தலகுண்டு, இதுமாதிரி பல இடங்களிலே, தீயணைப்புப் பகுதியிலே வேலை செய்யக்கூடிய ஆட்களும் சரியாக இல்லை. அதோடு அந்தத் தீயணைப்பு வண்டியும் சரியாக இல்லை என்று அரசினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா ? ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நிலக்கோட்டை பகுதியிலே உள்ள தீயணைக்கும் வண்டி நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா என்று அம்மையார் கேட்கிறார்கள். புகார் இருக்கிறதா ? (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : வண்டியே இல்லை சார். அதற்கு ஏதாவது பண்ண முடியுமா ? (குறுக்கீடு) வண்டியே இல்லை.

(பதில் இல்லை.)

தமிழ்நாடு பரிசுச் சீட்டு அச்சடிப்பு.

*1638 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு எந்த அச்சகத்தில் அச்சிடப் படுகிறது ;

(ஆ) அதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் செலவாகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு பரிசுச் சீட்டு, கர்நாடக மாநிலம், மணிப்பாலில் உள்ள கனரா செக்யூரிட்டி அச்சகத்தில் அச்சிடப் படுகிறது.

(ஆ) இதற்கான செலவு, ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பரிசுச் சீட்டுக் குலுக்கல்களின் எண்ணிக்கை, வெளியிடப்படும் வரிசைகளின் எண்ணிக்கை ஆகியவைகளைப்பொறுத்து, ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். 1988-89 ஆண்டில் பரிசுச் சீட்டு அச்சிடுவதற்கு அரசு ரூ. 24,42,208.35 காசு செலவு செய்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY